தொழிலாளர்களைப் பற்றிய முக்கியச் செய்திகள் அரசின் கொள்கைகளை விமரிசிக்கும் வகையிலிருந்தால் அவற்றை ஆராய்ந்து தொழிலாளர் நல ஆணையாளர், அரசு ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்பேற்படுத்துவதும், உள்நாடு மற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர் பிரச்சினைகள், தொழிலாளர் நிலை ஆகியவற்றை ஒப்பு நோக்கி ஆராய்வதும் ஆகிய இவையே தொழிலாளர் நல உட்குழுவின் பொதுவான குறிக்கோளும், செயல் வரம்புமாகும். இக்குழுவின் பணிகளையும் தமிழ் நாட்டில் நிறுவவிருக்கும் தொழிலாளர் நல நிறுவனம் (**Labour Institute**) இணைத்து செயலாக்கும். இதற்கான திட்டத்தை நிறைவேற்ற அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

Relief to Workers

* 51 *Q.*—Thiru KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Labour be pleased to state whether there is any proposal to give relief to the workers who are affected by prolonged closure or lock-out of the industries?

தொழிலாளர்களுக்கு நிவாரணம்

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிடுவதால் அல்லது நீண்ட கதவடைப்பு செய்யப்பட்டு விடுவதால் பாதிக்கப்படுகிற தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளித்திடுகிற திட்டம் பற்றி செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தொழிற்சாலைகள் மூடப்படுவதால் அல்லது கதவடைப்பு செய்யப்படுவதால் பாதிக்கப்படுகிற தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிப்பது குறித்துச் செயற்குறிப்பு ஏதும் இல்லை.